## சில பிள்ளைகளுக்கு கேளுணர்வு குறித்த மதிப்பீடும் செய்யப்படும்

காது கேட்கிறதா என்பதை கண்டறிய செய்யப்படும் பரிசோதனையில் பெரும்பாலான பிள்ளைகள் தேர்ச்சி பெற்று விட்டாலும், சில பிள்ளைகளுக்கு “முடிவுகள் மறுபார்வை” செய்யப்படும். இதன் அர்த்தம் என்ன என்றால் அந்த குழந்தைக்கு கேளுணர்வு குறித்த மதிப்பீடு செய்யவேண்டியதாகும். இந்த மதிப்பீடு செயல்முறையானது ஆடியாலஜிஸ்ட் எனப்படும் கேளுணர்வு தொடர்பான வல்லுனர் ஒருவரால் நடத்தப்படும் இவர் பிள்ளைகளின் கேளுணர்வை பரிசோதிப்பதில் தேர்ச்சி பெற்றவராக இருப்பார். உங்கள் பகுதிக்கான கைக்குழந்தை கேளுணர்வு திட்டம் உங்களுக்கு இவரைப்பார்பதற்கான ஒழுங்கை செய்துதரும்.

முடிவுகள் மறுபார்வை செய்யப்பெறும் பெரும்பாலான குழந்தைகளுக்கு சரியான கேளுணர்வு இருக்கும். காதுக்குழாயில் சிதைவுகளால் அடைப்புகள் அல்லது பரிசோதனையின்போது அசைவது ஆகிய காரணங்களால்தான் பெரும்பாலும் முடிவுகள் மறுபார்வை செய்யப்படவேண்டியதாக இருக்கும். இருந்தாலும், உங்கள் பிள்ளைக்கு காது கேட்பதில் பிரச்சினை இருந்தால், உங்களது பிள்ளைக்கும் மற்றும் உங்களுக்கும் உள்ள சேவைகள் மற்றும் உதவிகளுக்கு செல்ல ஆடியாலஜிஸ்ட் உங்களுக்கு வழிகாட்டுவார்.



## பெரும்பகுதி கைக்குழந்தை கேளுணர்வு திட்டங்கள்

**ஒன்ராரியோவின் கைக்குழந்தை கேளுணர்வு திட்டம், பின்வரும் பெரும்பகுதி பிரதேச அலுவலகங்கள் மூலமாக தனது சேவைகளை தருகிறது:**

ஹாமில்டன் - வென்ட்வொர்த், நயாகரா, பிரான்ட் மற்றும் ஹால்டிமண்ட் - நார்போல்க்
“Early Words/Premiers Mots”
905-385-7927 தொடர்பு.x 227
அல்லது 1-866-826-4327 தொடர்பு.x 227
www.ascy.ca/ascy_infanthearing.html

ஹால்ட்டன், பீல், வாட்டர்லூ மற்றும் வெல்லிங்டன்-டபரின்
Central West Infant Hearing Program
905-855-3557
அல்லது 1-877-374-6625
TTY 905-855-4925
www.erinoak.org

மேனிடாலின்-சட்பரி, அல்கோமா, கோக்ரேன், மற்றும் நிபிசிங்-டிமிஸ்கேமிங்
“Wordplay / Jeux de Mots”
1-877-522-6655

கெனோரா ரெய்னி ரிவர்
“North Words”
1-877-553-7122
www.northwords.com

ஆட்டாவா, ரென்புரூ கவுன்ட்டி மற்றும் மாவட்டம் மற்றும் கிழக்கு ஒன்ராரியோ
“FirstWords”
613-688-3979 அல்லது
1-866-432-7447
TTY 613-820-7427
www.pqhcs.com/firstwords/infant_hearing.htm

சிம்கோ கவுன்ட்டி மற்றும் மஸ்கோகா-பேரிசவுண்ட்
Children's Development Services
705-739-5696
அல்லது 1-800-675-1979

கிங்ஸ்டன், பிரான்டினாக், லெனாக்ஸ் மற்றும் அடிங்டன், லீட்ஸ், கிரென்வில் மற்றும் லனார்க், மற்றும் ஹேஸ்டிங்க்ஸ் மற்றும் பிரின்ஸ் எட்வர்ட் கவுன்ட்டிகள்
613-549-1232 தொடர்பு.x 145
அல்லது 1-800-267-7875 தொடர்பு.x 145
TTY 613-549-7692
அல்லது 1-866-299-1136
www.healthunit.on.ca

மிடில்செக்ஸ், லண்டன், ஆக்ஸ்போர்டு, எல்ஜின்-ஸ்டிரீட். தாமஸ், சார்னியா-லாம்ப்டன், ஹியூரான்-பொர்த் மற்றும் கிரே புரூஸ் ஓவன் சவுண்ட்
“tykeTALK / Southwest Infant Hearing Program”
519-663-0273
அல்லது 1-877-818-8255
www.tyketalk.com

தண்டர் பே
Thunder Bay District Health Unit
807-625-5922
1-888-294-6630 தொடர்பு.x 5922
www.tbdhu.com

ரொரான்ரோ மாநகரம்
Toronto Preschool Speech and Language Services
416-338-8255
TTY 416-338-0025
www.tpsls.on.ca

யார்க் பகுதி, டியுரம், ஹாலிபர்ட்டன், கவார்த்தா மற்றும் பைன்-ரிட்ஜ்
“Beyond Words”
1-888-703-5437
TTY 905-773-7282
www.beyond-words.org

விண்ட்சர்-ஈசெக்ஸ் மற்றும் கென்ட்-சட்டாம்
“Talk 2 Me”
(519) 252-0636
www.smflc.ca

**மேலதிக விவரங்களுக்கு, தொடர்பு கொள்க:**

ஒன்ராரியோ அரசு
INFOline: இலவசம் 1-866-821-7770
TTY 1-800-387-5559
www.children.gov.on.ca

Version française disponible en communiquant avec

le 1 866 821-7770
ATS 1 800 387-5559
www.children.gov.on.ca

Catalogue 7710-6135702 TAMIL
December, 2007 ©Queen's Printer for Ontario

# கைக்குழந்தை கேளுணர்வு திட்டம் (INFANT HEARING PROGRAM)



# உங்கள் பிள்ளைக்கு காது கேட்குமா?

Ontario



## உங்கள் பிள்ளைக்கு காது கேட்குமா என்பதை தெரிந்து கொள்வது முக்கியம்

பிள்ளை பிறப்பிலிருந்து துவங்கும் முதல் சில மாதங்கள் மற்றும் வருடங்கள்தான் பிள்ளையின் வாழ்க்கையில் பேச்சுத்திறன் வளர்வதற்கு மிக முக்கியமான கால கட்டமாகும். கேளுணர்வு குறைபாடு கண்டுபிடிக்கப்படாமல் விடப்படுவது மொழித்திறன் வளர்ச்சி தாமதமாவதற்குரிய காரணங்களில் ஒன்றாகும். பேச்சுத்திறன் வளர்ச்சியில் குறைபாடு இருந்தால் அது பின் நாட்களில் குணநலன் மற்றும் உணர்ச்சிபூர்வமான பிரச்சனைகளுக்கு வழிவகுத்து, பின் அவை பாடசாலையிலும் பிரச்சனைகளுக்கு காரணமாக அமையக்கூடும்.

ஒன்ராரியோவில் ஒவ்வொரு ஆண்டும், ஏறக்குறைய 1,000 குழந்தைகளுக்கு மூன்று குழந்தைகள் செவிடாகவோ அல்லது கேட்கும் திறன் குறைபாட்டுடனோ பிறக்கிறார்கள். ஒன்ராரியோ கைக்குழந்தை கேளுணர்வு தீட்டத்தின் மூலமாக இது போன்ற குழந்தைகளை மிகவும் துவக்கத்திலேயே கண்டறிந்து அவர்களது மொழித்திறன் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படுகிறது.

செவிடு அல்லது செவிட்டுத்தன்மை கொண்ட பெரும்பாலான பிள்ளைகளுக்கு அவர்களது கேளுணர்வு குறைபாடு ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு உரிய உதவி கிடைக்கப்பெற்று, கேளுணர்வு கொண்ட மற்ற பிள்ளைகளைப்போலவே இந்தப்பிள்ளைகளுக்கும் மொழித்திறனை வளர்த்துக்கொள்வதற்குரிய அதேபோன்ற வாய்ப்பு கிடைக்கிறது.

## உங்கள் பிள்ளைக்கு கேளுணர்வு பரிசோதனை செய்துகொள்ளலாம்

ஒன்ராரியோவில் பிறக்கும் அனைத்து சிறு குழந்தைகளுக்கும் காது கேட்கிறதா என்பதை அறிய பரிசோதனை செய்யலாம், அவர்கள் பிறக்கும் மருத்துவமனையிலோ, அல்லது சமூக வைத்திய மையங்களிலோ இதை செய்யலாம். இந்த பரிசோதனைக்கு கட்டணம் கிடையாது. இது மிகவும் எளிதான, நம்பகமானதாக விரைவிலேயே முடியக்கூடிய நடைமுறையாகும், உங்கள் பிள்ளைக்கு சவுகரியமானதாகவும் மற்றும் பாதுகாப்பானதாகவும் இருக்கும்.

உங்கள் குழந்தையின் கேளுணர்வுத்திறனை பரிசோதிக்கும் தொழில்நுப்ப செயல்முறையில் உங்கள் குழந்தையின் காதுகளில் சிறிய கேளுணர்வு சாதனங்கள் பொருத்தப்படும். அந்த கேளுணர்வு சாதனங்கள் மூலமாக மென்மையான ஒலிகள் செலுத்தப்படும் மற்றும் அவற்றுக்கு ஏற்ற காதுகளின் பிரதிபலிப்புகள் அளக்கப்படும் மற்றும் பதிவு செய்யப்படும். இந்த செயல்முறை முழுவதும் உங்கள் குழந்தை பெரும்பாலும் நித்திரையாகவே இருக்கக்கூடும், இந்த பரிசோதனை முடிந்த உடனேயே முடிவுகள் உங்களுக்கு தெரியவரும்.

உங்களுக்கு குழந்தை பிறந்த உடன் நீங்கள் மருத்துவமனையை விட்டு வீட்டுக்கு செல்லும் முன்னதாக ஏதேனும் காரணங்களுக்காக உங்களது கைக்குழந்தைக்கு கேளுணர்வு பரிசோதனை செய்யப்படவில்லை என்றால், இந்த கையேட்டின் பின்புறம் உள்ள கைக்குழந்தை கேளுணர்வு திட்ட பட்டியலில் இருந்து உங்களுக்கு அருகே உள்ள இடத்தில் தொடர்பு கொள்ளவும்.

# வளர்ச்சிக்கான மைல்கற்கள்

இந்த வளர்ச்சிக்கான மைல்கற்கள் இளம் பிள்ளைகள் பேச கற்றுக்கொள்ளும்போது ஏற்படும் மொழித்திறன் வளர்ச்சி குறித்த சில திறமைகளை காட்டுகிறது. உங்கள் பிள்ளை சிறப்பான பேச்சு மற்றும் மொழி திறமைகளை வளர்த்துக்கொள்ள நீங்கள் எவ்வாறு உதவ இயலும் என்பதற்கான சில யோசனைகளும் தரப்பட்டுள்ளன.



## 6 மாதங்களில்

- ஒலி வரும் திசை நோக்கி தலையை திருப்புதல்
- திடீர் என, பெரிய ஒலிகள் கேட்டால் திடுக்கிடுவது
- வித்தியாசமான தேவைகளுக்கு வித்யாசமான விதங்களில் அழுகை - எனக்கு பசிக்கிறது, எனக்கு களைப்பாக இருக்கிறது
- நீங்கள் பேசும்போது உங்கள் முகத்தை கூர்ந்து கவனிப்பது
- உங்களது புன்னகைகள் மற்றும் சிரிப்புகளுக்கு பதிலாக புன்னகை செய்வது மற்றும் சிரிப்பது
- இருமல் மற்றும் வேறு பல ஓசைகளைப்போல அதே மாதிரி குரல் கொடுப்பது - *அஹ், எக், ப்பூ*

## 9 மாதங்களில்

- அவன்/அவளது பெயர் அழைத்தால் அதற்கு தக்கவாறு இயங்குதல்
- தொலைபேசி மணி அடித்தால் மற்றும் கதவு தட்டும் ஓசை ஆகியவற்றுக்கு தகுந்த இயக்கம் காட்டுதல்
- "நோ" எனக்கூறினால் அதன் பொருளை உணர்ந்துகொள்வது
- சைகைகள் மூலமாக அவன்/அவள் தேவையானவற்றை கேட்டுப்பெறுதல் உதாரணமாக தூக்கவேண்டும் என்றால் கைகளை நீட்டுதல்
- உங்களுடன் சேர்ந்து விளையாடுதல் உதாரணமாக, கண்ணாமுச்சி
- மனிதர்களுடன் இருப்பதை விரும்புதல்
- மழலை மொழியில் திரும்பத் திரும்ப பிதற்றுதல் - *பாபாபாபா, த்தத்தத்தத்த*

## 12 மாதங்களில்

- எளிமையான ஒற்றைச்சொல் குறிப்பை பின்பற்றுதல் - "சிட் டவுன்"
- நீங்கள் சுட்டிக்காட்டுவதை காண்பதற்கு அறையின் குறுக்காக பார்வையை செலுத்துதல்
- தொடர்ந்து மூன்று முதல் ஐந்து சொற்களை பாவித்தல்
- தகவல் தொடர்பிற்கு சைகையை பாவித்தல் - "பை பை" என கை அசைத்தல், "நோ" என்பதற்கு தலையை மறுப்பாக அசைப்பது
- ஓசைகள் மூலம், சைகையாலும் மற்றும் சுட்டிக்காட்டும் போதும் உங்கள் கண்களை கூர்ந்து பார்த்து உங்கள் கவனத்தை ஈர்ப்பது
- உங்களிடம் காட்டுவதற்காக விளையாட்டு பொருட்களை உங்களிடம் கொண்டுவருவது
- கவனத்தை கவரவும் மற்றும் புகழ்ச்சியை பெறவும் "நடித்துக்காட்டுதல்"
- பேசுவதுபோல நிறைய ஓசைகளை இணைத்தல் - *அபாபாபா ப்புபுபூ அபீபீபீ*
- படங்களுடன் கூடிய எளிமையான புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல்

## 18 மாதங்களில்

- "உள்ளே மற்றும் வெளியே", "நிறுத்தம் மற்றும் துவக்கம்" ஆகியவற்றின் கருத்தை புரிந்துகொள்வது
- கேட்கும்போது உடல் உறுப்புக்களை சுட்டிக்காட்டுதல்
- தொடர்ச்சியாக 20 சொற்களையாவது உபயோகித்தல்
- "கரடி பொம்மை எங்கே?", "அது என்ன?" போன்ற எளிமையான கேள்விகளுக்கு சொற்களாலோ அல்லது சைகைகளுடனோ பதில் சொல்வது
- பொம்மைகள் வைத்து விளையாடும்போது சில செயல்களை நடித்துப்பார்த்து விளையாடுதல் - கரடி பொம்மைக்கு குடிக்க தருவது, வட்டமான பாத்திரத்தை தொப்பிபோல பாவிப்பது
- குறைந்தபட்சமாக நான்கு வித்தியாசமான இசைவு ஒலிகளை எழுப்புதல் - *p, b, m, n, d, g, w, h*
- புத்தகத்தை நீங்கள் வாசித்துக்காட்டுவதையும் மற்றும் உங்களுடன் சேர்ந்து எளிமையான புத்தகங்களை பார்க்கவும் விரும்புதல்
- ஒற்றை விரலை பாவித்து படங்களை சுட்டிக்காட்டுதல்

## 24 மாதங்களில்

- இரண்டுபடிகள் கொண்ட குறிப்புகளை பின்பற்றுதல் - "உனது கரடிபொம்மையை கண்டுபிடித்து பாட்டியிடம் காட்டு"
- 100 முதல் 150 சொற்கள் வரை உபயோகித்தல்
- இரண்டு பெயர் சொற்களையாவது உபயோகித்தல் - "நீ", "நான்", "எனது"
- சிறு சொற்றொடரில் இரண்டு அல்லது நான்கு சொற்களை இணைப்பது - "அப்பா தொப்பி", "ரக் போகுது கீழே"
- மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்திருப்பதை விரும்புதல்
- சக பிள்ளைகளுக்கு பொம்மைகளை தருவது மற்றும் மற்ற பிள்ளைகளின் செயல்கள் மற்றும் சொற்களை பின்பற்றி அதே போல செய்வது
- அவன்/அவளது சொற்களில் 50 முதல் 60 சதவீதத்தை மக்களால் விளங்கிக்கொள்ள இயலும்
- எளிதாக சொற்களையும் மற்றும் ஒலிகளையும் உருவாக்க இயலும்
- புத்தகத்தை சரியான முறையில் நேராக பிடித்து பக்கங்களை திருப்புதல்
- பஞ்சு அடைத்த விலங்குகள் மற்றும் பொம்மைகளுக்கு "வாசித்தல்"
- கிரேயான்கள் கொண்டு கிறுக்குதல்

## 30 மாதங்களில்

- உருவ அளவுகள் பற்றி விளங்கிக்கொள்வது (பெரிய/சிறிய) மற்றும் எவ்வளவு (கொஞ்சம், நிறைய, அதிகம்)
- பெரியவர்கள் பாவிக்கும் இலக்கணம் சிலவற்றை பாவித்தல் - "இரண்டு குக்கிகள்", "பறவை பறக்கிறது", "நான் குதித்தேன்"
- 350 சொற்களுக்கும் அதிகமாக உபயோகித்தல்
- செயல்வினை சொற்களை உபயோகித்தல் - ஓடு, சிதறு, விழு
- சொற்கள் மற்றும் விளையாட்டு பொருட்களை உபயோகித்து, மற்ற பிள்ளைகளுடன் சிறிய அளவில் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தல்
- மற்ற பிள்ளை அடிபட்டுவிட்டால் அல்லது சோகமாக இருந்தால் கவலையை வெளிப்படுத்துதல்
- விளையாடும்போது பல செயல்களை இணைப்பது - பொம்மைக்கு உணவு ஊட்டி நித்திரையாக்குதல், சிறு பிளாக்குகளை இரயிலில் வைத்து இரயிலை ஓட்டிச்சென்று பிளாக்குகளை கீழே போடுதல்
- பெரும்பாலான சொற்களை ஆரம்பிக்கும்போது ஒலியை அழுத்தமாக உச்சரிப்பதல்
- இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஒலி இசைவுகள் அல்லது பதங்களுடன் சொற்களை உருவாக்குதல் - "ப-னா-னா", "கம்ப்-யூட்-டர்", "ஆ-ப்பிள்"
- நன்கு தெரிந்த முத்திரைகள் மற்றும் சின்னங்களை அடையாளம் கண்டு கொள்வது - மெக்டொனால்ட்ஸ் இன் தங்க வளைவுகள், நிறுத்தக்குறி
- நன்கு தெரிந்த கதைகளை நினைவு கொள்வது

## நீங்கள் பின்வருவனவற்றை செய்யும்போது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்:

- உங்கள் முகத்தை அவர்கள் நன்கு பார்க்கக்கூடிய அளவில் வைத்து அவர்களுக்கு நிகராக சமமான அளவில் இறங்கிச்செல்லவேண்டும். அவர்கள் செய்வது மற்றும் சொல்வதில் நீங்கள் ஆர்வம் காட்டுகிறீர்கள் என்று இதன் மூலம் அவர்களுக்கு தெரிவிக்கப்படும். உங்களுடன் தொடர்பு கொள்வதற்கு இது மிகவும் எளிதாக இருக்கும்.
- அவர்கள் உருவாக்கும் ஒலிகளை மறுபடி திருப்பிச்சொல்லவும். குழந்தைகள் ஒலிகளை எழுப்புவதில் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள், மேலும் நீங்கள் அந்த ஒலிகளைப்போலவே திரும்ப திரும்ப சொல்வதை மிகவும் விரும்புவார்கள்.
- குறிப்பாக உணவு ஊட்டும்போது, குளித்துவிடும்போது, உடை மாற்றும்போது போன்ற நேரங்களின்போது பாட்டு பாடி நன்கு சிரிக்கவும். நினைவில் கொள்க நாள் முழுவதும் நீங்கள் செய்யும் செயல்கள் குறித்தும் மற்றும் பார்ப்பவை குறித்தும் உங்கள் குழந்தையிடம் சொல்லவும் - "அம்மா கோட் போடுகிறாள்" , "அது பெரிய ரக்"
- அவர்கள் பார்க்கும் மற்றும் விளையாடும் பொருட்களின் பெயரை அவர்களிடம் கூறவும். குழந்தைகள் புதிய பொருட்களை ஆராய்ந்து பார்க்கவும், அவற்றைப்பற்றி தெரிந்துகொள்ளவும் மற்றும் அவற்றின் பெயர் என்ன என்று தெரிந்துகொள்ளவும் மிகவும் ஆர்வம் காட்டுவார்கள்.

## நீங்கள் பின்வருவனவற்றை செய்யும்போது பாலகர்களுக்கு மிகவும் பிடிக்கும்:

- நீங்கள் புத்தகத்தில் படங்களை காட்டி பெயர்களைச்சொல்லும்போது அவர்கள் புத்தகத்தை தொடுவதற்கும் புத்தகத்தை பிடித்துக்கொள்ளவும் அனுமதிக்கவும்.
- மழலைச்சொற்களை உபயோகிப்பதற்கு பதிலாக உண்மையான சொற்களை உபயோகிக்கவும் - *தாதா* என்பதற்கு பதிலாக "எனக்கு தா" *போபோ* என்றெல்லாம் சொல்லாமல் "போத்தல்" என்று கூறவும்.
- அவர்கள் ஏதாவது சொன்னால் நேரம் செலவிட்டு கவனித்து கேட்கவும் - அவர்கள் தங்களது புதிய சொற்களை, ஓசைகளை மற்றும் யோசனைகளை நீங்கள் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று விரும்புவார்கள்.
- அவர்கள் பின்பற்றக்கூடிய வகையில் எளிமையான குறிப்புகளை தரவும் - "போய் உனது சிவப்பு காலணிகளை பார்".
- அவர்களிடம் நீங்கள் பேசும்போது நிறைய வித்தியாசமான சொற்களை பாவிக்கவும் - மேல்/கீழ், உள்ளே/வெளியே என்பது போன்ற எதிர்மறை சொற்கள், "ஓடுதல்", "சிதறுதல்" போன்ற செயல் வினைச்சொற்கள் மற்றும் "சந்தோசம்", "பெரியது", "சிறியது", "சுத்தம்", "அழுக்கு" போன்ற விளக்கச்சொற்கள்.
- மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடும்படி ஊக்கப்படுத்தவும் - வாசகசாலையில், விளையாட்டு குழுக்களில், பூங்காவில்.